24th August 1970]

திரு. வி. தங்கபாண்டியன் : மதுரை மாவட்டத்தில் "கள்ளர் ரெக்ளமேஷன்" என்ற அடிப்படையில் பல உணவு விடுதிகளும் பள்ளிகளும் திறக்கப் பட்டிருக்கின்றன. இராமனுதபுரம் மாவட்டத்தில் "மறவர் ரெக்ளமேஷன்" என்ற அமைப்பின் மூலமாக பின்தங்கிய மாணவர்களுக்காக பள்ளிகளையும் ஹாஸ்டல்களையும் திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பின் தங்கிய நலக் குழுவின் அறிக்கை விரைவில் வர இருக்கிறது. அதற்குப் பிறகு உறுப்பினரின் கருத்தை நிறைவேற்ற அரசாங்கம் ஆவன செய்யும்.

Salt Pans Factory.

* 8. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Salt Pans Factory in Ramanathapuram district coastal area;

(*b*) if so, the amount proposed to be invested in it;

(*c*) whether the Central Government have offered any financial assistance for this scheme; and

(*d*) if so, how much?

உப்பளத் தொழிற்சாலை

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இராமநாதபுரம் மாவட்டக் கடற்கரைப் பகுதியில் உப்பளத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எவ்வளவு முதலீட்டில் தொடங்கப்படும்?

(உ) மத்திய அரசாங்கம் ஏதேனும் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளதா?

(எ) ஆமெனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) & (உ) அரசின் பரிசீலனையிலிருப்பதால் மத்திய அரசை நிதி உதவிக்கு இதுவரை அணுகவில்லை.

(எ) வினுவிற்கு இடமில்லை.

Rivers in Tamil Nadu

* 9. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the rivers which have their origin in other States but provide irrigation facilities for Tamil Nadu;

(*b*) the quantum of water available to Tamil Nadu from each river every year; and

(*c*) the quantum of water available to Tamil Nadu from (1) catchment area in other States and (2) the catchment areas in Tamil Nadu?

தமிழ் நாட்டில் ஓடும் ஆறுகள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டிற்கு பாசன வசதியளித்து வரும் ஆறுகளில் வெளி மாநிலங்களில் உற்பத்தியாகி தமிழ் நாட்டில் ஓடும் ஆறுகள் எவை ?

(இ) அவ்வாறுகளில் தனித்தனியே ஓராண்டில் தமிழ் நாட்டில் பாயும் தண்ணீரின் அளவென்ன ?

(உ) இவ்வாறுகளுக்கு ஓராண்டில் (1) வெளி மாநில நீர்பிடிப்புப் பகுதிகள் அளிக்கும் நீரின் அளவென்ன ? (2) தமிழ் நாட்டுப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் நீரின் அளவென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) தமிழ்நாட்டிற்கு பாசன வசதியளித்து வரும் ஆறுகளில் வெளி மாநிலங்களில் உற்பத்தியாகி தமிழ் நாட்டில் ஓடும் ஆறுகள்—

காவேரி
பாலாறு
பொன்னியார்

(இ) & (உ) : நீரின் அளவு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழைப் பெருக்கத்தைப் பொருந்திருக்கிறது. ஆகையால் இவ்வாறுகளுக்கு ஓராண்டில் (1) வெளி மாநில நீர்பிடிப்புப் பகுதிகள் அளிக்கும் நீரின் அளவு (2) தமிழ் நாட்டுப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் நீரின் அளவு ஆகியவற்றைக் கணக்கிடுதல் இயலாது.

Women Conductors

* 10. Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of Thiru G. Swaminathan): Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal with the Government to appoint women conductors in Tamil Nadu State Transport buses intended for women?

பெண் பயணித்துணை

திரு. ஏ. ஆர். தாமோதரம் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் —

மகளிர்க்கான தமிழ் நாடு அரசுப் பேருந்துகளில் பெண் பயணித் துணைகளை (Women Conductors) நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இல்லை.

திரு. சா. கணேசன் : ஏன் இல்லை? அப்படிச் சேர்ப்பதில் என்ன சிரமம் அல்லது தீமை இருக்கிறது என்று அரசு கருதுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெண்கள் குறித்து இத்தனை அக்கறை எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. ஆயினும் தற்போது இருக்கிற சூழ்நிலையில் அப்படி நியமிப்பது சரியில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.